# லல்லு பிரசாத் யாதவ் பிறந்த நாள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!



சென்னை, ஜீன் 13 - ராஷ்டிரிய ஜனதா தளக் கட்சியின் தேசியத் தலைவர் லல்லு பிரசாத் யாதவ் அவர்களின் பிறந்தநாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி உள்ளார்.

அதில்,"**மதச்சார்பின்மைக்கும் சமூக நீதிக்கும் தாங்கள் தொடர்ந்து பாடுபட்டு வருவது, நாடு முழுவதுமுள்ள ஜனநாயக மற்றும் முற்போக்குச் சக்திகளுக்கு உந்துதலாக உள்ளது. நீங்கள் நல்ல உடல் நலத்தோடும் மகிழ்ச்சியோடும் திகழ வாழ்த்துகிறேன்**" என்று குறிப்பிட்டுள்ளார்.

### நீலகிரி மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர்

# கலைஞர் 103வது பிறந்தநாள் விழா - தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்,ராஜூ எம்,எல்,ஏ, அறிவிப்பு!



*நீலகிரி, ஜுன் 13-* நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு, நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஒன்றிய - நகர பேரூர் கழக பகுதிகளில் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தலைமை கழக சொற்பொழிவாளர்கள் சிறப்புரையாற்ற நடைபெற உள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

நாள் - நிகழ்ச்சிகள் ஏற்பாடு - தலைமை கழக சொற்பொழிவாளர்கள் விவரம் வருமாறு:

*14.6.2026* - கீழ்கோத்தகிரி ஒன்றியம் - முரசொலி மா.வெங்கடேஷ், பந்தலூர் மத்திய ஒன்றியம், நடுவட்டம் பேரூராட்சி - மு.பாண்டியராஜ்,

*15.6.2026* - சோலூர் பேரூராட்சி - எஸ்.ராஜா,

*20.6.2026* - உதகை கிழக்கு நகரம் -உடுமலை தண்டபாணி, *21.6.2026*- குன்னூர் நகரம், உலிக்கல் பேரூராட்சி- சிங்கை பிரபாகரன், பந்தலூர் கிழக்கு ஒன்றியம் - எம்.பி.ஆலன்,

*23.6.2026* - கோத்தகிரி ஒன்றியம், கோத்தகிரி பேரூர், எழும்பூர் கோபி

*24.6.2026* - உதகை மேற்கு நகரம், எழும்பூர் கோபி,

*25.6.202 6*- உதகை வடக்கு (மேற்கு) ஒன்றியம்- கேத்தி பேரூர்- கோவை துரைமுருகன்,

*26.6.2026* - குன்னூர் ஒன்றியம், ஜெகதளா பேரூர், வெலிங்டன் கண்டோன்மென்ட் - சி.எ.கலீம்,

*27.6.2026*- கூடலூர் ஒன்றியம்- சேலம் சுஜாதா,

*28.6.2026* - உதகை தெற்கு (மேற்கு) ஒன்றியம். கீழ்குந்தா பேரூர்- திருப்பூர் கூத்தரசன், நெல்லியாளம் நகரம், பந்தலூர் மேற்கு ஒன்றியம்- சேலம் சுஜாதா, தேவர்சோலை பேரூர், ஓவேலி பேரூர்- மு.பாண்டியராஜ், கூடலூர் நகரம், பிக்கட்டி பேரூர் - கோவை துரைமுருகன்,

*29.6.2026* - உதகை தெற்கு (கிழக்கு) - ஒன்றியம் அ.ஜாகீர்உசேன், உதகை வடக்கு (கிழக்கு) ஒன்றியம் - சி.எ.கலீம்,

*30.6.2026* - மேலூர் ஒன்றியம், அதிகரட்டி பேரூர்- சிங்கை சௌந்தர்ராஜன்

மேற்கண்ட தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் அனைத்தும் சிறப்புடன் நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் அந்தந்த நகர ஒன்றியபேரூர் கழக செயலாளர்கள் செய்வதோடு, கூட்டங்களில் அந்தந்த நகர, ஒன்றிய, பேரூர் கழகங்களுக்கு உட்பட்ட அனைத்து கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### த.வெ.க. அரசின் நிர்வாகத் திறமையின்மையால்

# தினசரி மின்வெட்டால் இருளில் தவிக்கும் மக்கள்!

## அமைச்சரின் மழுப்பல் பேச்சு!

*சென்னை, ஜுன் 13 -* தமிழகம் முழுவதும் தினசரி மின்வெட்டு பிரச்சினை தலைவிரித்தாடும் நிலையில், த.வெ.க. அரசின் நிர்வாக திறமையின்மையால் அவதியுறுகிறோம் என பொது மக்கள் குற்றச்சாட்டை முன் வைத்து வருகின்றனர்.

தமிழக வெற்றி கழகத்தின் தேர்தல் பிரசார பாடலில் 'நான் தன்னந்தனி ஆளு, நீ ஏளனமா பாரு, கொஞ்சம் நவுந்தேன்னா இங்க எட்டு கோடி பேரு,' என பாடல் தொடங்கும். தற்போது த.வெ.க.விற்கு வாக்களித்து ஆட்சியில் அமரவைத்த பின்னர் ஏன் வாக்களித்தோம் என தினசரி அந்த எட்டு கோடி பேரும் கேட்கும் அளவிற்கு மாநிலத்தில் ஏற்படும் மின்வெட்டு, பெண்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்ளே சான்று.

### அமைச்சரின் மழுப்பலான பதில்!

விஜய் தலைமையிலான அரசு ஆட்சி பொறுப்பேற்ற மிக குறுகிய காலத்திலேயே, ஒட்டுமொத்த மாநிலமும் கடுமையான அறிவிக்கப்படாத மின்வெட்டு பிரச்சினையில் சிக்கித் தவித்து வருகிறது. தேர்தலின்பது, 'மாற்றம் தருவோம்,' என முழங்கிவிட்டு, தற்போது நிலவும் மின் நெருக்கடிக்கு தீர்வு காணாமல், மின் துறை அமைச் சர் சி.டி.ஆர். நிர்மல்குமார் தொடர்ந்து மழுப்பலான காரணங்களையும் கட்டுக்கதைகளையும் கூறி வருவது பொதுமக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதே நேரத்தில், இந்த மின்வெட்டுகளுக்கு பின்னால் பல்வேறு நிர்வாக சீர்கேடுகளும், திட்டமிட்ட சதிகளும் இருப்பதாக அவர் கூறிவருகிறார். பொதுமக்களுக்கு தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டியது தற்போதைய த.வெ.க. அரசின் முதன்மை கடமை. ஆனால், மின் துறை அமைச்சர் நிர்மல் குமார் மின்வெட்டு ஏற்படும் போதெல்லாம், முந்தைய திமுக ஆட்சியின் முறைகேடுகளையும், மின் வாரியத்தின் கடன் சுமைகளையும் மட்டுமே திரும்ப திரும்ப பேசி வருகிறார்.

புதிய அரசு பொறுப்பேற்று ஒரு மாத காலம் ஆகிறது. ஆனால் தொடரும் மின்வெட்டு பிரச்சினையை சரிசெய்ய முடியாமல் திணறி வரும் மின்சாரத்துறை அமைச் சர் இன்னும் பழைய ஆட்சியை குறை கூறிக்கொண்டிருப்பது தவெக அரசின் மீதான நிர்வாகத் திறமையின்மையையே காட்டுவதாக பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும், 'ரீல்ஸ்' காட்டி ஆட்சிக்கு வந்துவிட்டு, ரியல் நிர்வாகத்தில் இந்த அரசு தோற்று விட்டதா என்ற பலத்த விமர்சனம் எழுந்துள்ளது.

அண்மையில் தொடரும் மின்வெட்டு பிரச்னையை சமாளிக்க தெரியாமல் மக்களை திசைத் திருப்ப தமிழக மின்வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் மின்வாரிய தரவுகளை கொண்ட ஹார்ட் டிஸ்க்குகள் திருடப் பட்டதாக கூறப்பட்டது.

அதன் பின்னர் அதில் எந்த ஆதாரபூர்வமான தடயங்களும் இல்லை என தேய்ந்து போனது ஒருபுறமிருக்க, டெண்டர் முறைகேடுகளை காரணம் காட்டி புதிய திட்டங்கள் முடக்கப்பட்டு வருகின்றன.

முந்தைய சோலார் டெண்டர்களில் குளறுபடிகள் இருந்தால் அதற்கு காரணமானவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, மொத்த திட்டங்களை யும் முடக்கி வைப்பது எந்த வகையில் நியாயம் என கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

### அரசே திட்டமிட்டு மின்தட்டுப்பாட்டை உருவாக்குகிறது!

இந்த விவகாரம் மூலமாக உள்கட்டமைப்பை மேம்படுத்த புதிய டெண்டர்களை உடனே கோராமல் காலம் கடத்துவது, இந்த மின் தட்டுப்பாட்டை அரசே திட்டமிட்டு உருவாக்குவது போல உள்ளதாக சமூக ஆர்வலர்கள் கருத்துகளை தெரிவிக்கின்றனர். அதே போல், மின்மாற்றிகள் பழுதடைந்துள்ளன, மின் சுமை அதிகமாக உள்ளது எனத் தொழில்நுட்பக் காரணங்களை அமைச்சர் அடுக்கினாலும், அதைத் தடுக்க அரசு என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தது என்ற கேள்வி எழுகிறது.

கோடைகாலம் மற்றும் மின் தேவையின் உச்ச வரம்பை முன்கூட்டியே கணிக்கத் தவறியது ஏன்?. மின்வாரியத்தில் 70,000 பணியாளர்கள் பற்றாக் குறை இருப்பதாகக் கூறும் அமைச்சர், போர்க்கால அடிப்படையில் புதிய ஆட்களை நியமித்துத் தடையற்ற மின்சாரத்தை உறுதி செய்யாமல், வெறும் புள்ளிவிவரங்களை மட்டும் ஊடகங்களில் பேசுவது ஏன் என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

### அரசின் பொறுப்பற்ற செயல்!

நீடிக்கும் தொடர் மின்வெட்டின் அவநிலையின் ஒரு பகுதியாக நேற்றைய தினம் கூட மாங்காடு, பூந்தமல்லி, ஆவடி, போரூர் போன்ற இடங்களில் மின்வெட்டு பிரச்சினை இருந்தது.

இதுகுறித்து அமைச்சரிடம் கேள்விகளை முன் வைத்தால் ஆவடி போன்ற சில பகுதிகளில் நள்ளிரவில் மர்ம நபர்கள் மின் கம்பங்கள் மற்றும் மின் பெட்டிகளில் உள்ள 'பியூஸ் கேரியர்களை' பிடுங்கிச் சென்று செயற்கையான மின்வெட்டை உருவாக்குவது சிசிடிவி காட்சி களில் பதிவாகியுள்ளது.

அரசை அவமானப்படுத்தவும், மக்களைப் போராட்டத்திற்கு தூண்டவும் இத்தகைய சதி வேலைகள் நடக் கின்றன என்று கூறி சிலர் கைதும் செய்யப்பட்டுள்ளனர் என கூறுகிறார்.

ஆனால், எங்கோ ஒரு இடத்தில் நடக்கும் பியூஸ் திருட்டுகளை காரணம் காட்டி, தமிழகம் முழுவதும் நிலவும் ஒட்டுமொத்த மின்வெட்டுப் பிரச்சினைக்கும் 'சதி' என்று முத்திரை குத்துவது பொறுப்பற்ற தனமானது.

அத்தகைய நபர்களைக் கட்டுப்படுத்துவதும் அரசின் கடமையே ஆகும். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மின்வெட்டு பிரச்சினைக்குக் கடந்த கால பிரச்சினைகளையே பேசிக் கொண்டு இல்லாமல், அதனைச் சரி செய்ய வேண்டிய முழு பொறுப்பும் தற்போதைய த.வெ.க. அரசுக்கே உரியதாகும். எனவே, போர்க்கால அடிப்படையில் புதிய மின்மாற்றிகளை அமைப்பதும், நிர்வாகத் திறனை மேம்படுத்துவதும் மட்டுமே தற்போதைய இருள் சூழ்ந்த நிலைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துமில்லை.

### திருப்பூர் மாநகராட்சிப் பள்ளியில் புகுந்து

# மரக்கன்றுகள் வழங்குவது போன்று த.வெ.க.வினர் 'ரீல்ஸ்'!

## அமைதி காக்கும் பள்ளிக் கல்வித்துறை!

*திருப்பூர், ஜுன் 13 -* திருப்பூர் மாநகராட்சி, பெரியார் குடியிருப்பு பகுதியில் மாநகராட்சி அரசு நடுநிலைப்பள்ளி உள்ளது. இங்கு மாணவர்களுக்கு சமீபத்தில் தவெகவினர் மரக்கன்றுகள் வழங்குவதாக கூறியுள்ளனர்.

பொதுவாக அரசுப் பள்ளி வளாகங்களுக்குள் அரசியல் கட்சியினர் நுழைவதற்கோ, கட்சி சார்ந்த விளம்பரங்களை மேற்கொள்வதற்கோ பள்ளிக் கல்வித்துறை கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. குறிப்பாக, பள்ளி நேரங்களில் வெளிநபர்களோ அல்லது அரசியல் அமைப்பைச் சேர்ந்தவர்களோ கல்வி அதிகாரிகளின் முறையான அனுமதியின்றி பள்ளி வளாகத்திற்குள் நுழையக்கூடாது என்றும், மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் தனிமனித உரிமை கருதி அவர்களைப் பெற்றோரின் அனுமதியின்றி புகைப்படம் அல்லது வீடியோ எடுக்கக் கூடாது என்றும் அரசு விதிகள் கூறுகின்றன.

மேலும், அரசுப் பள்ளிகளை எவ்வித அரசியல் பரப்புரைக்கோ, விளம்பர நோக்கங்களுக்கோ பயன்படுத்தக் கூடாது என்று விதிகள் உள்ள நிலையில், அதனைப் பொருட்படுத்தாமல் பள்ளிக்குள் நுழைந்த தவெகவினர், அங்குள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைத் தங்களது செல்போனில் புகைப்படம், வீடியோ எடுத்துள்ளனர்.

மரக்கன்று வழங்குவது போலத் தொடங்கிய இந் நிகழ்வை, அப்படியே ஒரு அரசியல் விளம்பரப் படமாக மாற்றியுள்ளனர்.

ஒரே ஒரு செடி வழங்கி மாணவர்களுடன் எடுத்த வீடியோக்களைத் தொகுத்து, பின்னணியில் சினிமா பாடல்களை ஒலிக்கவிட்டு, எம்.எல்.ஏ., நிர்வாகிகள் மற்றும் விஜய் ஆகியோரின் புகைப்படங்களுடன் கூடிய அரசியல் போஸ்டரையும் இணைத்து ரீல்ஸ் வீடியோவாக சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட கல்வித்துறை அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி விதிகளை மீறி செயல்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### தலைமை : க.செல்வராஜ்! முன்னிலை : டிகேடி மு.நாகராசன் – பி.ஆர்.செந்தில்குமார் – செ.திலகராஜ்! திருப்பூர் மத்திய மாவட்ட மாணவர் அணி சார்பில்

# "நவீன தமிழ்நாட்டின் சிற்பி" என்ற தலைப்பில் கருத்தரங்கம்!

## வீரமணி – எஸ்.கே.ஸ்ரீராம் பங்கேற்பு! மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத் அறிக்கை!

*திருப்பூர், ஜுன் 13 -* முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது 103வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் மத்திய மாவட்ட மாணவர் அணி சார்பில் "நவீன தமிழ்நாட்டின் சிற்பி" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது என்று மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

நாளை (14.06.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் திருப்பூர் மத்திய மாவட்ட கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழறிஞர், கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட மாணவர் அணி சார்பில் "நவீன தமிழ்நாட்டின் சிற்பி" என்ற தலைப்பில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் மாபெரும் கருத்தரங்கம் மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் திருப்பூர் தெற்கு மாநகர கழகச் செயலாளர் டிகேடி மு.நாகராசன் பகுதி கழக பொறுப்பாளர், மாமன்ற உறுப்பினர் பி.ஆர்.செந்தில் குமார், தெற்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இதில் கழக மாணவர் அணி செயலாளர் வீரமணி கலந்து கொள்கிறார். தலைமைக் கழக பேச்சாளர் சென்னை எஸ்.கே.ஸ்ரீராம் கருத்துரை வழங்குகிறார்.

அது சமயம் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மாமன்ற உறுப்பினர்கள், மாணவர் அணி நிர்வாகிகள் அனைவரும் பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளை அதிக அளவில் பங்கேற்க செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் மத்திய மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து. கோபிநாத் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




தமிழினத் தலைவர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு அமைப்பாளர் ஏ.எம். உசேன் ஏற்பாட்டில் தெலுங்குபாளையம் பகுதி, 79வது வட்டக் கழகத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்–புக், பேனா, பென்சில், குடைகளை மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினார். இதில் பகுதிச் செயலாளர் ராஜ்குமார், வார்டு மாமன்ற உறுப்பினர் வசந்தாமணி, வட்டச் செயலாளர்கள் இப்ராஹிம், சிவகணேஷ், வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.கே.வேலுச்சாமி மற்றும் பழனிச்சாமி, விஜி உள்பட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்தநாளை விழாவை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றியம், சின்னக்கம்பாளையம் பேரூர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற மாபெரும் ரேக்ளா போட்டியினை கழக துணை பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுக் கோப்பைகளை வழங்கினர். இதில் ஒன்றிய கழகச் செயலாளர், ஒன்றிக்குழு முன்னாள் தலைவர் எஸ்.வி.செந்தில்குமார், பேரூர்ச் செயலாளர் ரா.பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.